## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி– பள்ளிகள் – திருச்சி மாவட்டம், துறையூர், சிக்கத்தம்பூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு ரூ. 23,80,834 /– செலவில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை

அரசாணை (நிலை) எண்: 15

நாள் : 22.02.2019
விளம்பி வருடம்
மாசி திங்கள் 10–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். க4/16561/2017, நாள். 17.09.2018.

------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்களின் மனுவின் அடிப்படையில் திருச்சி மாவட்டம், துறையூர், சிக்கத்தம்பூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு, தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளுடன் கூடிய மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில், நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, திருச்சி மாவட்டம், துறையூர், சிக்கத்தம்பூர் அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு ரூ. 23,80,834 /– (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து நான்கு மட்டும்) செலவில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

" 4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் , ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 01 ஆதி திராவிடர் நலன் 277 கல்வி மாநிலச் செலவினங்கள் JB ஆதி திராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் 16 பெரும்பணிகள்

(த.தொ.கு. 4225 01 277 JB 1601) "

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணி தாட்கோ மூலம் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல், தாட்கோ

(த.பி.பா.)

நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை/ வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443-00- உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத் தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள்,

(து.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)

(து.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

5. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிப்பதற்கு ஏதுவாக கால அட்டவணை ஒன்றினை தாட்கோ, மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 8547/ஆதி(ம)பந/ 2019, நாள். 22.02.2019-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், திருச்சி
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், திருச்சி
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி(ஆதி(ம)பந)த் துறை, சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.5/ ஆதிந.7 ) துறை, சென்னை -600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்